**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 186/2013**

நாள்: 22.10.2025.

பெயர்: மோகன் (வா.சா.2) த/பெ: பக்கிரிசாமி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை...</u>**

1) வா.சா.ஆ.2 உயில் எழுதிய சமயத்தில் ராகவன் எங்கு குடியிருந்தார் என்றால் வேலாயுத நகர் புதுத்தெருவில் வசித்திருந்தார். பெரியசாமி என்பவரும், ராமசாமி என்பவரும் சகோதரர்கள் என்றால் சகோதரர்கள் என்று கூறி கேட்டுள்ளேன். பெரியசாமியின் மனைவி பச்சையம்மாள் என்றால் எனக்கு தெரியாது. பச்சையம்மாள், அஞ்சம்மாள் என்பவருக்கு 30.05.1980 ல் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி செட்டில்மெண்டில் தனது பெயரையும் சேர்த்து வாதியின் தந்தை எழுதிக்கொண்டார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி செட்டில்மெண்ட் சொத்தினை ராகவன், அஞ்சம்மாள், பச்சையம்மாள் ஆகியோர்கள் அனுபவித்து வந்தனர் என்றால் தெரியாது. மேற்படி சொத்தினை ராகவன் விட்டுக் கொடுக்காததினால் அவருக்கும், ராமசாமி, வாதி ஆகியோருக்கும் இடையே விரோதம் இருந்தது என்றால் தெரியாது.

2) வா.சா.ஆ.2 உயில் பதிவு செய்யப்படாதது என்றால் சரிதான். மேற்படி உயிலை ஏன் பதிவு செய்யவில்லை என்று நான் வாதியை கேட்டேனா என்றால் இல்லை. மேற்படி உயிலானது பத்திரத்தில் எழுதவில்லை, சாதாரண பேப்பரில் எழுதப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 உயில் எழுதப்பட்டது 13.06.2011 என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் 13.06.2011 அன்று ஒரு உயில் எழுதிவைத்துள்ளார் என்று நான் கூறியதில் யார் அதனை எழுதினார் என்றால் அது எழுதப்படவில்லை தட்டச்சு செய்யப்பட்டது. எங்கு தட்டச்சு செய்யப்பட்டது என்றால் ஜெயங்கொண்டம் CSS கம்யூட்டர் சென்டரில் தட்டச்சு செய்யப்பட்டது. யார் தட்டச்சு செய்தார் என்றால் எனக்கு பெயர் தெரியாது. வா.சா.ஆ.2 விபரங்களை தட்டச்சு செய்தவரே தயாரித்தார் என்றால் சரியல்ல,

ராகவன் கூறி தான் தயாரிக்கப்பட்டது. தட்டச்சு செய்த சமயத்தில் யார் யார் உடன் இருந்தனர் என்றால் 1) ராகவன், 2) ராமச்சந்திரன், 3) கொளஞ்சி, 4) மோகன் ஆகிய நான், 5) வீராசாமி ஆகியோர் உடன் இருந்தோம். கம்யூட்டர் சென்டருக்கு ராகவனை யார் அழைத்து வந்தனர் என்றால் நான் செல்வதற்கு முன்பே அவர் அங்கு இருந்தார். ராகவனுக்கு மகன்கள், மகள்கள், மனைவி ஆகியோர் இருக்கிறார்கள் என்றால் சரிதான்.

3) ராகவனுக்கு மகன்கள், மகள்கள், மனைவி ஆகியோர் இருக்கும் போது ஏன் ராமசந்திரனுக்கு எழுதிக்கொடுக்கிறீர்கள் என்று ராகவனை நான் கேட்டேனா என்றால் அவர்கள் என்னை பராமரிக்கவில்லை அதனால் ராமசந்திரனுக்கு எழுதிக்கொடுக்கிறேன் என்று ராகவன் கூறினார். மேற்படி ராகவனின் மகன்கள், மகள்கள், மனைவி ஆகியோர்கள் அவரை பராமரிக்கவில்லை என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 எழுதப்பட்ட 6 மாதங்கள் கழித்து 05.12.2011ல் ராகவனை, ராமசந்திரன் நிலத்தை விட்டுக்கொடுக்கவில்லை என்று கொலை செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. ராகவனை ராமசந்திரன் கொலை செய்துவிட்டார் என்று அவர் மீது வழக்கு நடந்துவந்தது என்றால் சரிதான். மேற்படி வழக்கு நிலுவையில் இருந்த போது நானும், கிராமத்தார்களும் சேர்ந்து பச்சையம்மாளுக்கு பாத்தியப்பட்ட நிலங்களை ராகவன் குடும்பத்தினருக்கு ராமசந்திரன் எழுதிக்கொடுத்துவிட்டால் கொலை வழக்கில் சமாதனமாக போக வேண்டும் என்று பஞ்சாயத்து பேசினோம் என்றால் சரியல்ல. மேற்படி பஞ்சாயத்து அடிப்படையில் 10.09.2013ல் அருள் முருகன் பெயருக்கு ராமசந்திரன் செட்டில்மெண்ட் சொத்துக்களை கிரையம் எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி கிரையம் எழுதிக்கொடுத்ததால் சமாதனமாகி கொலை வழக்கில் யாரும் சாட்சியம் அளிக்க முன் வராததனால் மேற்படி வழக்கில் இருந்து ராமசந்திரன் விடுதலை செய்யப்பட்டார் என்றால் சரியல்ல.

4) வா.சா.ஆ.2 தட்டச்சு செய்யப்பட்டதை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன், எனது முதல் விசாரணை வாக்கு மூலத்தில் நான் தட்டச்சு செய்ததை பார்த்ததாக கூறவில்லை. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில்

நெட்டெழுத்து பூர்த்தி செய்த வழக்கறிஞர் வீராசாமி என்று நான் கூறியுள்ளதில் எந்த நெட்டெழுத்தை பூர்த்தி செய்தார் என்றால் நான் அவ்வாறு கூறவில்லை. வா.சா.ஆ.2 எழுதிய பின்பு அதனை எனக்கு படித்து காட்டினார்களா என்றால் காட்டினார்கள், மேற்படி விபரத்தை நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ல் என்ன வாசகம் கண்டு எழுதப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.2 உயில் எழுதப்பட்ட 6 மாதத்திற்குள் ராமசந்திரன் மீது ராகவன் கொலை வழக்கு ஏன் போடப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

5) தானசெட்டில்மெண்ட் சொத்தை ராமசந்திரன் ராகவன் குடும்பத்தில் உள்ள அருள் முருகனுக்கு கிரையம் எழுதிக்கொடுத்ததால், ராகவன் சொத்துக்கள் முழுவதையும் அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வா.சா.ஆ.2 யை மோசடியாக தயாரித்து இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என் பெயரில் நீதிமன்றத்தில் சிவில் வழக்குகள் அதிகமாக உள்ளது என்றால் சரிதான். எனக்கு நீதிமன்ற நடைமுறைகள் பற்றிய விபரங்கள் எனக்கு முழுமையாக தெரியும் என்பதால் வா.சா.ஆ.2 யை மோசடியாக தயாரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ராகவன் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், அதில் உள்ள கையெழுத்து ராகவனுடையது இல்லை என்றாலும் சரியல்ல. மனைவி, பிள்ளைகளுடன் சுமூகமாக வாழ்ந்து வந்த ராகவனுக்கு வா.சா.ஆ.2 எழுதிவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்/ப.மோகன்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.